# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1983, மார்ச்சு மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, மார்ச்சு மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 35* *தபாற் செலவு : சதம் 50*

**1983 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்**

[1983 மார்ச் மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 61/82
1549

**வான் கலமோட்டுச் சட்டத்தையும், 1982 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தையும் திருத்துவதற் கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்பட லாம். சுருக்கப் பெயர்.

2. (ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தால் மாற்றீடு செய்யப்பட்ட) வான் கலமோட்டுச் சட் டத்தின் 23 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— 365 ஆம் அத்தி யாயத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) அரசாங்கத்தின் சார்பில் மூகவரினல் சேகரிக்கப்படும் அல்லது அறவிடப்படும் கட்டணங்கள், வரிகள் அல்லது இறுப்பனவுகளிலிருந்து—

(அ) மூகவர், அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகளுக்கென கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினல் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய கட்டணத்தையும்; அத்துடன்

(ஆ) வானூர்திகளைத் தரையிறக்குதல், பாவித்தல் அல்லது நிற்பாட்டு தல் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் மூகவரால் அறவிடப் பட்ட கட்டணங்களையும், இறுப்பனவுகளையும் விஞ்சாததும், வானூர்தி நிலையங்களினதும், விமான நிலையங்களினதும் அபி விருத்திக்கான நோக்கத்திற்காக அரசாங்கத்தின் சார்பில் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப் பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறுக மூல தனச் செலவினத்திற்குத் தேவைப்படக்கூடியதுமான அத்த கைய வேறு பணத்தொகையையும்,

மூகவர் பிடித்துவைத்திருத்தல் வேண்டும்.".

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வான் கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரி வானது, அப்பிரிவின் (அ), (ஆ) என்ற பந்திகளுக்காகப் பின்வரும் பந்தி களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1982 ஆம் ஆண் டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) (i) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று விமான நிலைய அதிகாரசபையின் உடைமையிலும் கட்டுப்பாட்டிலும் உள்ள அசைவற்ற ஆதனம் யாவும் சிவில் வான் செல வுப் பணிப்பாளருக்கு மாற்றப்படுதலும் அவருக்கு உரித்தாதலும் வேண்டும்;

2—ஏ 68169—7,100(02/83)

(ii) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று விமான நிலைய அதிகாரசபைக்கு உரித்தாகவிருந்த அல்லது அதன் உடைமையிலும், கட்டுப்பாட்டிலுமிருந்த பணம் உட்பட்ட எல்லா அசைவுள்ள ஆதனங்களும், வான் கலமோட்டுச் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவருக்கு மாற்றப்பட்டு அவருக்கு உரித்தாதல் வேண்டும்;

(ஆ) (i) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று விமான நிலைய அதிகாரசபையிடம் இருந்துவருகின்றனவான ஒப்பந்தங்களிலிருந்தும் வேறு கடப்பாடுகளிலிருந்தும் எழும் எல்லா உரிமைகளும், சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும், வான் கலமோட்டுச் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவருக்கான உரிமைகள், சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் எனக் கருதப்படல் வேண்டும்;

(ii) நியமித்த தேதிக்கு முன்னர் விமானநிலைய அதிகாரசபையினால் அல்லது அதனுடன் உறப்பட்டனவும் நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்துவருகின்றனவுமான எல்லாக் கடன்களும், கடப்பாடுகளும், பொறுப்புக்களும், அவ்வதிகாரசபையினால் அல்லது அதனுடன் எழுதி நிறைவேற்றப்பட்டனவும் அல்லது செய்துகொள்ளப்பட்டனவும் நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்து வருகின்றனவுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும் உடன்படிக்கைகளும், ஏனைய சாதனங்களும், அவ்வதிகாரசபையினால் அல்லது அதனுடன் செய்யப்பட வேண்டுமென ஈடுபடுத்தப்பட்டனவும், நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்து வருகின்றனவுமான எல்லாக் கருமங்களும் காரியங்களும், வான் கலமோட்டுச் சட்டத்தின் 21அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகவரினால் அல்லது முகவருடன் விடயத்திற்கேற்றுற்போல, உறப்பட்டிருப்பனவாக, எழுதிநிறைவேற்றப்பட்டிருப்பனவாக, செய்து கொள்ளப்பட்டிருப்பனவாக அல்லது செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்டிருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 250 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*